# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8029437

1. District : Kanchipuram
மாவட்டம்
PS: VEAC Kanchipuram
காவல்நிலையம்
Year: 2017
ஆண்டு
FIR No.: 6/AC/2017 (KPM)
மு.த.அ. எண்
Date: 12.10.2017 at 16.30 hrs
நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 — Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : 9.10.2017 நாள் முதல்
Date to : 11.10.2017 நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : 18.00 hrs நேரம் முதல்
Time to : 15.30 hrs நேரம் வரை
(b) Information Received at PS. Date : 11.10.2017 / 12.10.2017
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time நேரம் : 15.30 hrs / 16.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) 11.10.2017
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time நேரம் : 15.30 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: East about 1 Km
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி
C/o The Assistant Commissioner,
Prohibition and Excise,
Collectorate Campus,
Kanchipuram District.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. J. Nirmal Kumar,
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : Tr. Jeeva,
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : Age 38
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : Indian
நாட்டினம்
(e) Passport No. : —
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : —
வழங்கப்பட்ட நாள்
Place of Issue : —
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Supervisor, Tasmac No. 4388
தொழில்
(g) Address : No. 143, Sowrashtra St,
Thirukalimedu, Kanchipuram Taluk & District
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Srinivasan,
Assistant Commissioner,
Prohibition and Excise,
Collectorate Campus,
Kanchipuram Dt.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
Delayed by complainant and also the Preliminary Enquiry was conducted

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

NIL

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு NIL

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் NIL

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

(Attached in separate sheet)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed V. Ganesan Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

J. Nilofer 12/10/17 (signature)

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

(signature) 12/10/2017
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(V GANESAN)

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
13.10.2017 at 12.00 hrs

Name: பெயர் V. Ganesan
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் ………



நகல் பெற்றுக் கொண்டேன்
J. Nilofer (signature)

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.6/AC/2017/KM U/s 7 of Prevention of Corruption Act - 1988.)**

<u>பணிந்து அனுப்பப்பட்டது,</u>

கடந்த, 11.10.2017-ம் தேதி சுமார் மாலை 15.30 மணியளவில், நான் காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது, காஞ்சிபுரம் மாவட்டம், எண் 143, சௌராஷ்ட்ரா தெரு, திருக்காலிமேடு என்ற முகவரியில் வசித்து வரும் திரு.ஜீ.நிர்மல் குமார், த/பெ.ஜீவா, டாஸ்மாக் மேற்பார்வையாளர், காஞ்சிபுரம் என்பவர் ஆஜராகி கடந்த 11.10.2017-ந் தேதியிட்டு அவர் கையால் எழுதி என்னிடம் கொடுத்த புகாரின் விவரம் வருமாறு - அனுப்புநர், J.நிர்மல் குமார், வயது 38, S/o.P.K.ஜீவா, எண் 143, சௌராஷ்ட்ரா தெரு, திருக்காலிமேடு, காஞ்சிபுரம். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் காஞ்சிபுரம் மாவட்ட TASMAC-ல் கடந்த 14 வருடங்களாக மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். அச்சிரப்பாக்கம் தாலுக்கா மின்னல் சித்தாமூரில் உள்ள 4388 என்ற எண் கொண்ட TASMAC கடையில் கடந்த 10 மாதங்களாக மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி கடைக்கு நான் தினமும் 70 கிலோ மீட்டர் சென்று வருகிறேன். மேற்படி கடைக்கு சென்று வருவதற்கு சிரமமாக இருந்தது. ஆகையால் காஞ்சிபுரம் தாலுக்காவில் உள்ள ஏதாவது ஒரு கடைக்கு மாறுதல் வழங்கும்படி மாவட்ட மேலாளர் அவர்களிடம் வாய்மொழியாக கேட்டிருந்தேன். இந்நிலையில் நான் பணிபுரியும் கடையில் மதுபானங்கள் குறைந்த அளவே விற்பனை ஆவதால் அரசு வருவாயை கருத்தில் கொண்டு காஞ்சிபுரம் தேனம்பாக்கத்தில் திரு.பொ.குமாரகாளத்தி, த/பெ.பொம்மகிரி என்பவருக்கு சொந்தமான கட்டிடத்தில் நான் பணிபுரியும் மதுபான கடை எண் 4388-ஐ மாற்றல் வழங்கக் கேட்டு, எங்கள் மாவட்ட மேலாளர் திருமதி.ஏ.ஜீனத் பானு என்பவர் மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் எழுதியிருந்தார். அந்த கடை எண் நான் மேற்பார்வை செய்து வரும் கடை என்பதால் மேற்படி கோப்பினை, கடந்த 09.10.2017 அன்று என்னிடமே கொடுத்து இதனை ஆயத்தீர்வை உதவி ஆணையர் திரு.சீனுவாசன் அவர்களிடம் கொடுத்து உத்திரவு பெற்று வரும் வரை தொடர் நடவடிக்கையாக கவனித்து கொள்ளுமாறு கூறினார். நான் அந்த கோப்பினை என் அலுவலகத்திலிருந்து பெற்று 09.10.2017 அன்று மாலை 06.00 மணிக்கு திரு.சீனுவாசன் அவர்களை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடத்தில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து கோப்பினை கொடுத்த போது அவர் என்னிடம் மேற்படி கடைக்கு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரை செய்து, உத்திரவு பெற்றுத் தர எனக்கு ரூ.15,000/- லஞ்சமாக தர வேண்டும் என்று கேட்டார். நான் அப்பொழுது அரசு கடையை மாற்றுவதற்கு எதற்கு பணம் தர வேண்டும் என்று நான் தயங்கி

கேட்ட போது, அரசு கடையாக இருந்தாலும் பயன் பெற போவது நீ தானே எனக்கூறி, நீ போய் புதன் கிழமை பணத்துடன் வந்து பார் என்று கூறி அனுப்பி விட்டார். நான் மீண்டும் இன்று 11.10.2017-ம் தேதி சுமார் 03.30 மணியளவில் திரு.சீனுவாசன் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து அந்த கோப்பின் உத்திரவு குறித்து கேட்ட போது, நான் கேட்ட பணம் கொண்டு வந்தாயா எனக் கேட்டார். என்னால் பணம் தர இயலாத சூழ்நிலை உள்ளதை எடுத்து கூறிய போது, அவர் ரூ.10,000/- குறைத்து கொண்டு ரூ.5000/- த்துடன் 13.10.2017-ம் தேதி அலுவலகத்தில் வந்து சந்திக்குமாறு கூறி அனுப்பி விட்டார். இது சம்மந்தாக காஞ்சிபுரம் ஆயத்தீர்வை உதவி ஆணையர் திரு.சீனுவாசன் அவர்களுக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால் இப்புகார் மனுவை அளிக்கிறேன். எனவே அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் எடுக்கும் சட்ட நடவடிக்கைக்கு தக்க ஒத்துழைப்பு அளிக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம் J.Nirmal Kumar) 11/10/2017.

Honoured Sir,

I received the above complaint on 11.10.2017 at 15.30 hrs and after getting proper permission from DVAC on this complaint, a Preliminary Enquiry was conducted in a discreet manner. Based on the outcome of the Preliminary Enquiry, enmity, genuineness of the complaint and the reputation of the accused are verified. Since, there is prima-facie made out to register FIR on said complaint against the accused Tr.Srinuvasan, Assistant Commissioner, Prohibition and Excise, Collectorate Campus, Kanchipuram. Hence, I registered a case in Kanchipuram V&AC, Cr.No.6/AC/2017/KM u/s 7 of The Prevention of Corruption Act-1988 at about 16.30 hrs on today 12.10.2017 and took-up action.

12/10/2017